## –இந்த பேச்சுப்போட்டியின் சிறப்பு அம்சம்–



சுற்றுச்சூழல் பாதுகாப்பை பற்றி பேச மற்றும் சிந்திக்க, மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும், இந்த பேச்சுப் போட்டி நடத்தப்படுகிறது. ஹியோஷி இந்தியா நிறுவனம், நமக்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட முழு ஆதரவு வழங்கவே நிறுவப்பட்டது.

இந்த பேச்சுப்போட்டியின் மூலம் நீங்கள் ஹியோஷி இந்தியாவில் பணிபுரிந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறையில் சிறப்பாக செயல்பட வாய்ப்பளிக்கிறோம்.

இதை நீங்கள் உங்கள் செயல் மற்றும் நடவடிக்கையில் கொண்டுவந்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

## –கடைசியாக–



உங்களது முயற்சியால், இந்தியாவின் சுற்றுச்சூழலில் சுத்தமான நாடாகவும், சிறந்த பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்பட்ட நாடாகவும் உயரும் என நம்புகிறேன்.

விரைவில் உங்களை ஜப்பானில் சந்திக்க விரும்புகிறேன். நன்றி !!

உங்களது பேச்சுப்போட்டிக்கு என்னுடைய இனிய நல்வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் 23 2014.

村田弘司

ஹிரோஷி முராத்தா

பிரசிடெண்ட் & சிஇஓ,
ஹியோஷி கார்ப்பொரேஷன்


**Hiyoshi Corporation**

908, Kitanosho, Omihachiman,
Shiga, Japan 523-0806
TEL: +81-748-32-5111
FAX: +81-748-32-3339
http://www.hiyoshi-es.co.jp





**Hiyoshi India Ecological Services Pvt. Ltd.**

Module No: 201 & 202, 2nd floor,
TICEL Biopark Ltd.,
CSIR Road, Taramani,
Chennai - 600 113, TN, India
TEL: +91-44-4305-1111
http://hiyoshi-india.com





**ABK AOTS DOSOKAI Tamil Nadu Centre**

No.37(110),3rd floor,
Chateau D'Ampa, Nelson
Manickam Road, Aminjikarai,
Chennai - 600 029, TN, India
TEL: +91-44-2374-0318




# "Talk Your Way to Japan" Speech Contest

## Since 1995



நம்முடைய சுற்றுச்சூழலை பாதுகாப்போம்.

HIYOSHI Ecological Services

ABK AOTS DOSOKAI TAMILNADU CENTRE, CHENNAI

HIYOSHI india Ecological Services Pvt. Ltd.

## —20ம் ஆண்டு பேச்சுப்போட்டியின் சிறப்புச்செய்தி—

வணக்கம் こんにちは (Konnichiwa = Hello).



இந்த (TALK YOUR WAY TO JAPAN) பேச்சுப்போட்டியில் பங்கேற்க வந்துள்ள அனைவரையும் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பேச்சுப்போட்டியானது 1995ம் ஆண்டு ஹியோஷி கார்போரேஷன் என்ற ஜப்பான் நிறுவனத்தின் சேர்மன் திரு.கசுமி மற்றும் ஏபிசி-ஏஜுடிகேஷன் தோசோகாய் தமிழ்நாடு மையத்தின் சேர்மன் திரு M.R. ரங்கநாதன் அவர்களின் கூட்டுமுயற்சியில், ஏபிசி ஏஜுடிகேஷன் தோசோகாய்யின் 20ம் ஆண்டின் பொழுது தொடங்கப்பட்டது.

இந்த வருடப்பேச்சுபோட்டி (TALK YOUR WAY TO JAPAN) 20ம் ஆண்டு என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். வருடந்தோறும் (நான்கு) 4 மாணவர்கள், பேச்சுப்போட்டியின் மூலம் விமான டிக்கெட்டை வென்று, இரண்டு வாரம் சுற்றுச்சூழல் சம்பந்தமான பயிற்சி மற்றும் கலாச்சார பரிமாற்றம் சம்பந்தமான பயிற்சிக்காக ஜப்பான் சென்று வருகின்றனர். இதுவரை, 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜப்பானில் உள்ள ஹியோஷி கார்போரேஷன் நிறுவனத்திற்கு வந்துள்ளனர்.

## —இந்திய சுற்றுச்சூழலும் அதன் பாதுகாப்பும்—



உலக மக்கள் தொகை வரிசையில், இந்தியா இரண்டாம் இடமும், பொருளாதாரத்தில் வல்லமை பெற்ற நாடாகவும் மாறிக்கொண்டு வருகிறது. ஒரு கணக்கெடுப்பு அறிக்கையின் படி, இயற்கை பேரழிவு இல்லாமல் இருந்தால், 2025ம் ஆண்டில் அமெரிக்கா, சீனாவையடுத்து இந்தியா பொருளாதார வல்லரசு நாடாக மாற வாய்ப்புள்ளது. இந்தியா பொருளாதார வல்லரசு நாடுகளில் மூன்றாம் இடத்தை அடைந்தால், அனைவரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, மகிழ்ச்சி நிரம்பும் நாடாக மாறுவதுடன், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் கடமையும் உருவாகிறது.

1980ல் இருந்து இது வரை, நான் இந்தியாவிற்கு 10 முறைக்கு மேலாக வந்துள்ளேன். தொழில் மயமாக்கம் மற்றும் பொருளாதார முக்கியத்தின் விளைவாக, வருடந்தோறும் இந்தியாவின் சுற்றுச்சூழல் மிகவும் மாசுபட்டு வருகிறது.

இன்று, இளைஞர்கள் அனைவரும் சுற்றுசூழலைப்பற்றி உரையாட வந்திருப்பதைக்கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உங்களின் சுற்றுச்சூழலின் பற்றிய சிந்தனையும், நடவடிக்கையும், இந்தியாவின் சுற்றுச்சூழலை நல்ல நிலைக்கு கொண்டு செல்லும் என நம்புகிறேன்.

## —முன்சிங்க் டனல்— (MUNASINGHE TUNNEL)




ஜப்பானுடைய வரலாற்றை பார்க்கும்பொழுது, 1960ல் இருந்து 1980 வரையில் உயர் பொருளாதார வளர்ச்சியின் பொழுது, ஜப்பானின் சுற்றுச்சூழல் மிகவும் மாசுபட்டு, பெரிய பிரச்சனையாக இருந்தது. திரும்பவும் நல்ல சுற்றுச்சூழலை கொண்டு வர, நாங்கள் பெருமளவு பணமும், நேரமும் செலவழிக்க நேரிட்டது. எங்களுடைய இந்த அனுபவத்தில் இருந்து, பொருளாதார வளர்ச்சியோடு சுற்றுச்சூழலை காக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை அறிந்துகொண்டோம்.

இந்தியரால் அறிமுகம் செய்யப்பட்ட (MUNASINGHE TUNNEL) முன்சிங்க டனல் என்ற மிகச்சிறந்த சிந்தனை ஒன்று உள்ளது. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சி பாதையை நோக்கி செல்லும் பொழுது நாட்டின் சுற்றுச்சூழலும் மாசு அடைகிறது.

MUNASINGHE TUNNEL, ஒரு நாட்டின் சுற்றுப்புற சூழலின் முக்கியத்தை புரிந்துகொள்ள உதவுகிறது. X-அச்சானது பொருளாதார வளர்ச்சியும், Y- அச்சானது சுற்றுச்சூழல் சீர்கேடுகள் (மாசு) ஆகும். ஒரு நாடு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்லும் பொழுது சுற்றுச்சூழல் மாசுபாட்டை எதிர்கொள்ள நேரிடும். இதனை தவிர்க்கும் பொருட்டு, சுரங்கப்பாதையை கடப்பதுபோல, சுற்றுச்சூழல் மாசுபாட்டை நாம் புரிந்து கொண்டு தீவிர கவனம் செலுத்தி, நமது செயல் மற்றும் நடவடிக்கைகளை அதற்காக அர்ப்பணிக்க வேண்டும்.

## —எங்களுடன் இணைந்து இந்திய சுற்றுச்சூழலின் பாதுகாப்பு—



2011ம் ஆண்டு ஜனவரி மாதம், நமது ஹியோஷி இந்தியா (Hiyoshi India) சுற்றுச்சூழல் நிறுவனம் சென்னையில் நிறுவப்பட்டது. எங்களுடைய லட்சியம் இந்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் துறையில் வேலை செய்ய ஆர்வமுள்ள அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதாகும். ஹியோஷி இந்தியா வழங்கும் முழு சுற்றுச்சூழல் ஆதரவு என்னவென்றால் சுற்றுச்சூழல் அளவீடு மற்றும் நிலத்தடி நீர், குடிநீர், மண், ஆகியவற்றின் வேதியல் ஆய்வு (Analysis) குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் நீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் பரிசோதனை செய்யப்படுவதாகும்.

ஹியோஷி இந்தியா (Hiyoshi India) வின் கதவுகள் எப்பொழுதும் உங்களுக்காக திறந்தே இருக்கும். நீங்கள் இந்தியாவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக எங்களது ஜப்பானிய மற்றும் இந்திய ஊழியர்களுடன் சேர்ந்து பணிபுரியலாம். ஹியோஷி கார்போரேஷன், ஜப்பான் நிறுவனத்தின் 60 வருட அனுபவத்தை, ஹியோஷி இந்தியாவின் வளர்ச்சிக்காக அளிக்கிறது. தேவைப்பட்டால், ஹியோஷி இந்தியா (Hiyoshi India) ஊழியர்களுக்கு ஜப்பானில் சிறந்த பயிற்சியும் அளிக்கப்படும். இந்த பயிற்சி நீங்கள் இந்தியாவின் சுற்றுச்சூழலை பாதுகாக்க உறுதுணையாக அமையும்.






